**Sessions Case No. 7/2019**
**P.W. 9 – பாக்கியராஜ் (முதல்நிலை காவலர்)**
**நாள் - 11.04.2022**
**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கிறார்.

**Sessions Case No. 7/2019**
**P.W. 8 – ரமேஷ் (முதல்நிலை காவலர்)**
**நாள் - 11.04.2022**
**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கிறார்.

**Sessions Case No. 7/2019**
**P.W. 6 – கோமதி**
**நாள் - 11.04.2022**

**சாட்சி அழைக்கப்பட்டு, செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (2வது எதிரி தரப்பில்)**

நான் எனது பெரியப்பா அ.சா.2 மனோகரன் வீட்டில்தான் வளர்ந்து வருகிறேன். எனக்கு தேவையானவற்றை எல்லாம் செய்து வருகிறார். எனது அப்பா 12.02.2018 அன்று இறந்துவிட்டார் என்ற விபரத்ததை எனது அம்மா என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான், எனது அப்பா 12.02.2018 அன்று இறந்துவிட்டார் என்ற விபரத்ததை எனது அம்மா என்னிடம் சொல்லவில்லை என்பதை நீதித்துறை நடுவர் அவர்களிடமும், ஆய்வாளர் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்சமயம் எனக்கு மனவளர்ச்சியும், அறிவுப்பூர்வ மாக மனப்பக்குவம் அடைந்து நல்லது எது, கெட்டது எது என்று எனக்கு தெரியும். முதல்விசாரணையில் "அவ்வாறு திரும்பி வரும்போது என் அப்பா ரத்தபொரியல் வாங்கிவந்தார். அதை என்னிடமும், என் தங்கையிடமும் என் அப்பா கொடுத்தார். நாங்கள் அந்த பொரியலை எடுத்துகொண்டு வீட்டிற்கு சென்றோம். வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். என் அம்மா ஏது என்று கேட்டார்கள். அப்பா வாங்கிகொடுத்தார் என்று நாங்கள் சொன்னோம். உன் அப்பா இன்று சாகப்போறாங்க, அதனால்தான் வாங்கிகொடுத்திருக்காங்க என்று என் அம்மா சொன்னார். நாங்கள் வீட்டில் இருக்கும்போது, அப்பா இல்லாத சமயத்தில் எதிரி ஹரிஹரன் வீட்டிற்கு அடிக்கடி வருவார். என் அம்மா எனக்கும், தங்கைக்கும் விளையாட்டு பொருட்கள் வாங்கிகொடுத்து கொல்லையில்போய் விளையாடச் சொல்வார். அறையின் கதவை சாத்திவிட்டு சுமார் 1 முதல் 1-1/2 மணி நேரம் கழித்து அம்மாவும், ஹரிஹரனும் வெளியே வருவார்கள்" என்று எனது பெரியப்பா மனோகரன் கூறியதை வைத்து முதல்விசாரணையில் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையிலும், நீதித்துறை நவரிடமும் எனது பெரியப்பாவும், பெரியம்மாவும் சொல்லிக் கொடுத்து நான் சொன்னேன் என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் இவ்வழக்கு சம்பந்தமாக 15.02.2018 அன்று தான் விசாரித்துதான் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் சம்பவ தினத்தன்றே சிவில் டிரஸில் வந்து என்னை விசாரித்தான். 15.02.2018 அன்று விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை ஒரு தடவைதான் போலிசார் விசாரித்தார். 15.02.2018 விசாரித்ததாக கையொப்பம் செய்திருந்தாலும், பின்னிட்டு 26.08.2018 வாக்கில்தான் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் ஆய்வாளரிடம் சம்பவம் பற்றி சொல்லியதற்கு முன்பாக வேறு யாரிடமும் இது பற்றி சொல்லவில்லை. எனது பெரியப்பாவும், பெரியம்மாவும் சொல்லிக்கொடுத்ததின்பேரில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1வது எதிரி தரப்பில்)**

2வது எதிரியின் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**மறு விசாரணை** - இல்லை